முருகப்பெருமான் துணை

**மகான் புண்ணாக்கீசர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.05.2022**, திங்கட்கிழமை

1. யோக ஞான மாதவராசனே
உண்மை வழி காட்டும் அரங்கனே
யோகமான வாழ்வை மக்களடைய
உயர் வரம் தரும் ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
ஆசியுடன் சுபகிருது விடை திங்கள்
அருளுவேன் நவதிகதி சோம வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 09 ம் நாள், 23.05.2022 திங்கட்கிழமை)
3. வாரமதில் புண்ணாக்கீசர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
பாரதம் முழுக்க அரங்க மகான்
பரபிரம்ம சக்தி நிரம்பி இனிதே
4. இனிதே உலகம் எங்கிலுமாக
இந்தவித பிரம்ம சக்தி அலை
கனி வேலவன் வழிபாடாகியே
கருணை கலந்த மார்க்கமுமாகி
5. ஆகியே உலகோர் அனைவரும்
அரங்கமகான் உபதேசத்தாலும்
அகிலம் காக்கும் தருமத்தாலும்
ஆற்றல் கூடி நல்வழித் தேறுவர்
6. தேறவே உலகோர் அனைவருக்கும்
திருவருளாக குருவருள் நிரம்பி
அறமோடு வாழும் பண்பு கூடி
ஆசான் தேடும் ஞானவான்களாவர்
7. ஆவதால் சமூக மாற்றமாக
அகிலமெங்கும் சன்மார்க்கம் பரவி
புவனம் மாற்றும் ஞானஆட்சியின்
புண்ணிய காலம் உருவாகியே
8. ஆகியே உலக மாற்றம் தானும்
ஆறுமுகன் தலைமை கொண்ட
மிகைபட ஞானவான் நிறைந்த
முழுமையான ஞான ஆட்சியாக மலரும்
9. மலரவே மண்ணும் மகிழும்
மலரவே இயற்கை வளங்கள்
வளரவே ஆசிகள் பெருகி
வையகம் நீர்வளம் நிலவளம்

10. வளமுற பயிர்வளம் தொழில்வளம்
வாழ்வாதார நிலை குன்றாதபடி
பலமுற மக்களின் உயர்பண்போடு
பணபலம் பொன் பொருள் ஆஸ்தி

11. ஆஸ்திபலம் ஞான பலமும் கூடி
அமைதி தெளிவு அடக்கமென
சத்தியவானாக நிலைகள் பெருகி
சாமானியரும் ஞானிகள் ஆவர்
அருளாசி முற்றே

–சுபம்–